பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 12 | செவ்வாய்க்கிழமை | 26.03.2024 | அதிர்வு 238

## பண்டிகைக் கால மோசடி மக்களுக்கு எச்சரிக்கை

இலங்கை மக்களுக்கு பண்டிகைக் காலத்தில் இடம்பெறும் மோசடி தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் பொருள்கள் விற்பனை செய்யப்படும் இடங்களில் பொருள்களை 06

# சி.ஐ.டியில் முன்னிலையாகி மைத்திரி வாக்குமூலம் பதிவு

## ஐந்தரை மணி நேரம் நடந்தது வேறு வழியால் வெளியேறினார்





குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் நேற்று ஆஜரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கு வாக்குமூலம் வழங்கினார். நேற்று முற்பகல் 10.30 அளவில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் ஆஜரான அவரிடம் பிற்பகல் 3.50 வரை வாக்குமூலம் பெறப்பட்டதாக திணைக்களம் அறிவித்துள்ளது. 06

# கல்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரச்சினை மீண்டும் நேற்று பொதுமக்கள் போராட்டம் ஆரம்பம்





அம்பாறை,கல்முனை வடக்குப் பிரதேசசெயலகநிர்வாகப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு கோரி அனைத்து சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில் போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் நேற்றுக் காலை கல்முனை வடக்கு பிரதேச செயலக முன்றிலில் 06

# பதுளையில் தனியார் - அரச பஸ் சாரதிகள் இடையே கத்திக்குத்து





பதுளையில் தனியார் பஸ் ஊழியர்களுக்கும் அதே பாதையில் இயங்கும் அரச பஸ் ஊழியர்களுக்கும் இடையில் நேற்று மாலை பதுளை மத்திய பஸ் நிலையத்தில் மோதல் ஏற்பட்டுள்ளது.

இதன்போது, காயமடைந்த அரச ஊழியர்கள் இருவர் பதுளை போதனா வைத்தியசாலையில் 06




'காத்திருந்தவன் பொண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போனான்' என்ற பேச்சு நம் மத்தியில் உண்டு.

ஏற்கனவே சட்டச் சிக்கலில் மாட்டியிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உள்வீட்டில் இதுபோல ஒரு புதிய பிரச்சினை.

கட்சி தனது பிரச்சார நடவடிக்கைக்குப் 'புதிய சுதந்திரன்' என்ற பெயரில் ஒரு பத்திரிகையை ஆரம்பிக்க, கட்சி சார்பில் அதனை தன் பெயரில் பதிந்தவர் இப்போது அதனை தன் உடைமையாக்கித் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டார்.

காத்திருந்த தமிழரசு இப்போது கோட்டை விட்டு விட்டு முளுசுகிறது. 06



# கப் - கார் விபத்தில் நால்வருக்குக் காயம்

அம்பாறை மூவங்கலை வீதியில் கப் வண்டியும் காரொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் நால்வர் காயமடைந்து அம்பாறை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கப் வண்டி ஹிங்குராணையிலிருந்து அம்பாறை நோக்கிச் சென்று கொண்டிருந்த நிலையில் அதன் டயர் ஒன்று வெடித்ததால் அதைக் கட்டுப்படுத்த முடியாமல் வீதி ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றின் மீது அது மோதியுள்ளது.

இதன்போது கப் வண்டியில் பயணித்த நால்வர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.








# இணைந்த சுகாதாரக் கற்கை மாணவரின் வேலைவாய்ப்பை வலியுறுத்தி கவனவீர்ப்பு

## நேற்று யாழ் பல்கலைக்கழகத்தில் நடந்தது

**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்சன்)**

இணைந்த சுகாதாரக் கற்கைகள் மாணவர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்யக் கோரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் இணைந்த சுகாதாரக் கற்கைகள் பீட மாணவர்களினால் கவனவீர்ப்புப் பேரணி நேற்றுத் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட வளாகத்தில் ஆரம்பமாகி பலாலி வீதி ஊடாக பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் வரை இடம்பெற்று அங்கு கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இணைந்த சுகாதார விஞ்ஞான பட்டதாரிகள் மீதான பரபட்சமான அசமந்தப் போக்கை உடன் நிறுத்தி அரச நியமனங்களை வழங்கக் கோரி இந்தக் கவனவீர்ப்பு நிகழ்வு, முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மருந்தகவியல், தாதியியல், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், இயன் மருத்துவம் மற்றும் ஊடுகதிர்படமெடுப்பு ஆகிய துறைகளைச் சேர்ந்த இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்களின் வேலைவாய்ப்பில் அசமந்தமான போக்கை உடன் நிறுத்து, தரமான சேவையை மக்களுக்கு வழங்க இணைந்த சுகாதார விஞ்ஞான பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்கு, சுகாதார அமைச்சே எங்கள் காலத்தை வீனடிக்காதே போன்ற கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நடளாவிய ரீதியில் உள்ள பல்கலைக்கழகங்களில் இணைந்த சுகாதார விஞ்ஞான பீட பட்டப்படிப்பை பூர்த்திசெய்த 445 மருந்தகவியலாளர்கள், 450 மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானிகள், 750 தாதியர்கள், 105 ஊடுகதிர் படமெடுப்புவியலாளர்கள், 180 இயன் மருத்துவர்களுக்கு இதுவரை உள்ளக பயிற்சிகள் வழங்கப்படாமல் உள்ளது.

எனவே குறித்த மாணவர்களின் உள்ளக பயிற்சிகளை விரைவாக தொடங்க வேண்டும் எனவும், இனிவரும் காலங்களில் பட்டங்களை பெற்று வெளிவரும் பட்டதாரிகளின் உள்ளக பயிற்சிகளையும் காலம் தாழ்த்தாது நடாத்துமாறும் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




























# தெல்லிப்பழை துர்க்கை அம்மன் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேகம் நேற்றைய தினம் இடம்பெற்றது.

மகாகும்பாபிஷேக தினமான நேற்று அதிகாலை முதல் இடம்பெற்ற கிரியைகளைத் தொடர்ந்து காலை 6.00 மணி தொடக்கம் 7.10 மணி வரை பஞ்ச இராஜகோபுரங்களுக்கான கும்பாவிஷேகமும் காலை 9.25 மணி தொடக்கம் காலை 10.33 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் சபரிவாசமேத துர்க்காதேவிக்கு பெரும் சாந்தி விழாவும் இடம்பெற்றன.


மிகப்பிரமாண்டமான புனர்நிர்மாணிப்புக்களுடனும் , கருங் கல்லினால் செதுக்கப்பட்ட அபிராமி அந்தாதி கல்வெட்டுப் பொறிப்புக்கள் மற்றும் ஏனைய திருப்பணி வேலைகளுடன் மகாகும்பாபிஷேக பெருவிழாவிழா சிறப்புற இடம்பெற்றது.

**(மேலதீக படங்கள் 05ஆம் பக்கத்தில்....)**









# தெல்லிப்பழை துர்க்கை அம்மன் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா













## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அது தனது சொந்தப் பத்திரிகை என்ற மாதிரி வியாக்கியானப்படுத்தி, தன் பாட்டில் – கட்சியின் கட்டுப்பாட்டை மீறி – டிஜிட்டல் பத்திரிகையாக அதை வெளியிட தொடங்கி இருக்கின்றார் அவர்.

'சுதந்திரன்' பத்திரிகை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏடாக 1947 இல் இருந்தே வெளிவந்தது. தந்தை செல்வாவின் பெயரில் இயங்கிய பத்திரிகை, அவரின் மறைவுக்குப் பின்னர் அதன் உரிமை அவரின் வாரிசுகள் வசம் செல்ல, அப்பத்திரிகை மீதான கட்டுப்பாட்டை தமிழரசு இழந்தது.

2018 இல் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவின் முயற்சியில் 'புதிய சுதந்திரன்' என்ற பெயரில் அது மீள வெளிவரத் தொடங்கியது. கட்சி பல வழிகளிலும் நிதியை திரட்டி உதவியது. கட்சியின் வெளியீடாகவே வெளியீட்டு விழாவும் நடந்தது.

மாவையின் சார்பில் அவரின் நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் அதன் பொறுப்பு ஒப்படைக்கப்பட, அவரும் சத்தம் சந்தடியின்றி பத்திரிகையைத் தமது பெயரில் பதிந்து கொண்டார்.

இது குறித்துக் கட்சிக் கூட்டத்தில் சீற்றமாகப் பேசப்பட்டமையை அடுத்து உடனடியாகக் கட்சித் தலைவர் மாவையின் பெயரில் அதை மாற்றுவதற்கு சம்பந்தப்பட்டவரால் இணக்கம் தெரிவிக்கப்பட்டதாம். ஆனால் தேர்தல் கால வாக்குறுதியாக அது காற்றில் பறந்து விட்டது. செய்யப்படவில்லை.

'மாவை ஒரு சரித்திரம்' என்ற தொடருடன் பிரசுரமாக ஆரம்பித்த அந்த மாத இதழ் , அதை ஆரம்பித்த தரித்திரமோ என்னவோ 2020 உடன் நின்று போனது. கடைசியில் நிறுத்தும்படியான உத்தரவை மாவையே விடுத்தார் என நான் அப்போது அறிந்திருந்தேன்.

கடந்த பெப்ரவரி 15ஆம் திகதியன்று திடீரென டிஜிட்டல் வடிவில் அது – 'புதிய சுதந்திரன்' – வெளிவரத் தொடங்கியது.

யாரிடம் அந்தப் பொறுப்பை மாவை ஒப்படைத்தாரோ அவரே, தமது சொல்லில் அடங்காத தியாகத்தால்தான் அந்தப் பத்திரிகை முன்னர் வெளிவந்தது என்ற பறைசாற்றலுடன், இனி அந்தப் பத்திரிகை கட்சி சார்பு என்று இல்லாமல் வெளிவரும் என்ற அறிவிப்போடு தம்பாட்டில் அதை டிஜிட்டல் வடிவில் வெளியிடத் தொடங்கி விட்டார்.

அது குறித்து உடனடியாகவே தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் கடுமையாக விவாதிக்கப்பட்டது. தமக்குத் தெரியாமல் அது வெளி வருகின்றது என்று கையை விரித்தார் மாவையர். சுமந்திரன், சிறீதரன் இருவரும் உட்பட அனேகமாக எல்லோருமே கட்சியின் அனுமதியின்றி அப்படி பத்திரிகை வெளிவர இடமளிக்கக்கூடாது என்று கூட்டத்தில் ஒரே குரலில் வலியுறுத்தினர். கட்சியின் முடிவுப்படி மூன்றாம் நாளே கட்சியின் பதில் பொதுச் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் சம்பந்தப்பட்டவருக்கு கடிதம் அனுப்பினார் – கட்சி அனுமதி இன்றி 'புதிய சுதந்திரன்' வெளியிடுவதை உடனடியாக நிறுத்தும்படி. ஆனால் பத்திரிகை நிறுத்தப்படவில்லை.

My car, My petrol என்ற மாதிரி அவர் தன்னிஷ்டப்படி பத்திரிகையை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

ஏற்கனவே பத்திரிகை வெளியீட்டுக்காக வெளிநாட்டில் இருந்து பல லகரங்களில் உதவிய ஆதரவாளர்கள் இனி என்ன, முகட்டைப் பார்த்துக் கொண்டு கணக்கை தண்ணீரில் எழுதி விட்டுக் கைவிடவேண்டியதுதான்.

இப்போது பத்திரிகை வெளியிடப்படுவதற்கும் தமக்கும் தொடர்பில்லை என்று அரசியல் குழுக் கூட்டத்தில் மாவை சேனாதிராஜா மறுத்தாலும், எனக்கு அதில் நம்பிக்கை இல்லை.

23 – 03 – 2024 இல் வெளியான இதழில் வலி வடக்குக் காணி விடுவிப்புத் தொடர்பான முன்னைய வழக்குகள், அவற்றின் இலக்கங்கள் மற்றும் விவரங்களோடு கட்டுரையும் விடய தானங்களும் வந்திருக்கின்றன – மாவையைப் புளுகி.

எனக்கு இருக்கும் ஊடக அறிவில், இன்றைய நிலையில் இத்தகைய விவரங்கள் அடங்கிய கட்டுரையை ஒன்றில் மாவை சேனாதிராஜாவிடமிருந்து அல்லது சுமந்திரனிடமிருந்து விவரங்களைப் பெற்றுத்தான் வரைந்திருக்க முடியும் என்பது தெரிகிறது.

கட்சித் தலைவர் தேர்தலில் சுமந்திரனுக்கு எதிராக சண்டப்பிரசண்டம் பண்ணியவர் அதை வெளியிடுபவர். ஆகவே அந்தக் காணி விடுவிப்பு விடயங்கள், விவரங்கள் சுமந்திரனிடமிருந்து போயிருக்க வாய்ப்பே இல்லை என்று நினைக்கிறேன்.

மாவை 'பிள்ளையையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டும்' தமது கைவரிசையை இந்த விடயத்திலும் காட்டுகின்றார் என்பதுதான் என் சந்தேகம்.

'சுதந்திரனை' வெளியிடும் சுதந்திரம் இனி தமிழரசுக்கு இல்லை. 'புதிய சுதந்திரனை'யும் கைவிட்டு, 'நவீன சுதந்திரனுக்கு' இனிப் போக வேண்டியதுதான்.

## சி.ஐ.டியில் முன்னிலை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றைய விசாரணைகள் முடிவடைந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிப்பதை தவிக்கும் வகையில் திணைக்களத்தின் பிரதான நுழைவாயில் இன்றி பிறிதொரு வாயில் வழியே அவர் வெளியேறினார் எனத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தெரிவித்த கருத்து குறித்து வாக்குமூலம் வழங்குவதற்காகவே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்தியது யார் என்பது தமக்கு தெரியும் என அவர் கடந்த 22 ஆம் திகதி தெரிவித்திருந்தார்.

மூன்று வாரங்களுக்கு முன்னர்தான் அது குறித்துத் தமக்குத் தெரிய வந்ததாகவும் அவர் கூறியிருந்தார் என்பது தெரிந்ததே.

## பண்டிகைக் கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொள்வனவு செய்யும் போது நுகர்வோர் ஏமாற்றப்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

காலாவதியான பொருள்களின் தகவல்கள் மாற்றப்பட்டு, பண்டிகைக் காலங்களில் விற்பனை செய்யும் மோசடி இடம்பெறுவதற்கான அதிக வாய்ப்புகள் காணப்படுவதாக நுகர்வோர் அதிகார சபை பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்துள்ளார்.

எனவே, இது தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## பதுளையில் தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்க்கப்பட்டுள்ளனர்.

தனியார் பஸ் சாரதி மற்றும் உதவியாளர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளார்.

பஸ் இயங்கும் நேரம் குறித்த வாக்குவாதத்தின் போது, தனியார் பஸ் சாரதி, அரச பஸ் சாரதி மற்றும் நடத்துனரை கத்தியால் குத்தி காயப்படுத்தியுள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து, அரச பஸ் ஊழியர்கள் குழுவொன்று தனியார் பஸ் மீது தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கல்முனை வடக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெற்றுள்ளது.

ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் இணைந்து இப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். தொடர்ச்சியாகத் தீர்வு கிடைக்கும் வரை இப்போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த போராட்டம் இடம்பெற்று வரும் பகுதியில் கல்முனை தலைமையக பொலிஸார் பாதுகாப்பை வழங்கியுள்ளனர்.



இதே போன்று கடந்த 2019ஆம் ஆண்டு கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பதற்கான உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு பின்னர், பல அரசியல்வாதிகள், பிரமுகர்களின் போலி வாக்குறுதிகளால் போராட்டத்தைக் கை–விடும் நிலை ஏற்பட்டிருந்தது.

முன்னைய போராட்டத்தில் கல்முனை சுபத்திராம விகாரையின் விகாராதிபதி ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர், கிழக்கிலங்கை இந்து குருமார் ஒன்றிய தலைவர் ஸ்ரீஸ்ரீ க.கு.சச்சிதானந்தம் சிவம், குருகல் முனை மாநகர சபை உறுப்பினர்களான சா.சந்திரசேகரம் ராஜன் மற்றும் அழகக்கோன் விஜயரத்னம் ஆகியோரும் கலந்து கொண்டு களமிறங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வட்டு. இளைஞன் கடத்திக் கொலை:

# பிரதான சந்தேக நபர் உள்ளிட்ட மூவர் வன்னியில் மூன்று இடங்களில் கைது!

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பகுதியில் இளைஞரொருவரைக் கடத்திக் கொலை செய்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் உள்ளிட்ட மூவர் யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கொலைக்கு பயன்படுத்தப்பட்ட காரின் உரிமையாளரான வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 38 வயது மதிக்கத்தக்க பிரதான சந்தேக நபர் ஓட்டுசுட்டான் பகுதியில் வைத்துக் கைது செய்யப் பட்டார்.

கிளிநொச்சி, வவுனியா என வெவ்வேறு பகுதிகளில் வைத்து மற்றைய இருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

வட்டுக்கோட்டைப் பகுதியை சேர்ந்த இளைஞன் தனது மனைவியுடன் காரைநகர் பகுதிக்குச் சென்று விட்டு, மோட்டார் சைக்கிளில் திரும்பும் வேளை பொன்னாலை பாலத்திற்கு அருகில் உள்ள கடற்படை முகாமிற்கு முன்பாக வைத்து மனைவியுடன் கடத்தி செல்லப் பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னர் கைது செய்யப்பட்ட 06 பேர் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கைதான மூவரையும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்றைய தினம் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

# புதுவருடத்தில் பெரிய வெங்காயத்தின் விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை



சித்திரைப் புதுவருட காலத்தில் பெரிய வெங்காயத்தின் விலையைக் குறைப் பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

வர்த்தக அமைச்சர் நளின் பெர் னாண்டோ இந்தத் தகவலை வெளி யிட்டுள்ளார்.

பண்டிகைக் காலத்தில் பெரிய வெங்காயத்தின் விலையை 375 முதல் 400 ரூபாவிற்கு பெற்றுக்கொடுக்க எதிர் பார்ப்படுகின்றது எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

# யுக்திய சுற்றிவளைப்பில் மேலும் 906 பேர் கைது

திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவினரில் இருவர் கொட்டாஞ்சேனை மற்றும் பொரளை ஆகிய பகுதிகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

35 மற்றும் 38 வயதான இருவரே சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, யுக்திய சுற்றிவளைப் பில் மேலும் 906 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இவர்களில் 862 பேர் போதைப் பொருள் குற்றச்சாட்டுகளுடன் தொடர் புடையவர்களாவர்.

போதைப்பொருள் தடுப்புப்பிரிவு மற்றும் விசேட அதிரடி படையினரினால் பட்டியலிடப்பட்டிருந்த 21 பேர் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், குற்றப்பிரிவினரால் பட்டியலிடப்பட்டிருந்த 44 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பின் போது, ஹெரோயின், ஐஸ், கஞ்சா, மாவா, போதை வில்லைகள் உள்ளிட்ட பெரு மளவான போதைப்பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.



# ஏப்ரல் முதல் அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா சம்பளம் அதிகரிப்பு

2024 வரவு - செலவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அரச ஊழியர்க ளின் பத்தாயிரம் ரூபா சம்பள அதிக ரிப்பு, எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த தொகை ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படவுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், குறைந்த வருமானம் பெறு வோருக்கு நிவாரணமாக வழங்கப் படவுள்ள 10 கிலோ அரிசி, எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் வழங்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஓய்வூதியக் கொடுப் பனவாக அதிகரிக்கப்பட்டுள்ள 2,500 ரூபாய் தொகை ஏப்ரல் மாதம் முதல் வழங்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டுள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சீனக் கப்பல்களால் பதற்றம்

சீனக் கடற் படையின் நடவடிக்கைகள், நகர்வுகள் பதற்றமான சூழ்நிலைகளை ஏற்படுத்தி வருகின்றன.

தென் சீனக் கடலில் பிலிப்பீன்ஸின் இறையாண்மைக்குச் சவால் விடும் விதத்தில் பிலிப்பீன்ஸின் சிவில் படகு ஒன்றின் மீது நீர்ப் பீரங்கி மூலம் சீனக் கடலோரக் காவல் படையின் கப்பல் நடத்தியுள்ள தாக்குதலை அடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இதே சமயம் இந்தியப் பெருங்கடலில் சீனா தன் உளவுக் கப்பல்களின் நகர்வுகளைத் தீவிரமாக்கி இருக்கின்றமை இந்திய - சீன உறவில் மேலும் முறுகல் நிலையை ஏற்படுத்தி உள்ளது.

இந்தியா தனது பாதுகாப்பு மூலோபாய நடவடிக்கையாக ஏவுகணைச் சோதனைகளை நடத்த இருக்கையில், சீனக் கப்பல்கள் இந்தியப் பெருங்கடலில் இந்தியாவை நெருங்கி நோட்டமிடும் நோக்கில் வளைத்து வியூகமிட்டு, வேவு நடவடிக்கைகளில் துரிதமாக ஈடுபட்டிருக்கின்றன என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்தியப் பெருங்கடலில் ஒன்றல்ல, நான்கு சீன ஆய்வு அல்லது கண்காணிப்புக் கப்பல்கள் ஒரே சமயத்தில் அணி எடுத்து தீவிர எச்சரிக்கை நிலையில் நகர்கின்றன என்ற விடயம் கடல்சார் கண்காணிப்பு கட்டமைப்புகள் மூலம் அம்பலமாகி இருக்கின்றது எனக் கூறப்படுகின்றது.

அதிலும் இரண்டு சீன கப்பல்கள் இந்தியாவுக்கு நெருக்கமாக, அதன் கொல்லைப்புறத்திலிருந்து நோட்டமிடுகின்றன என்றும் செய்திகள் கூறுகின்றன.

வங்காள விரிகுடாப் பகுதியில் இந்தியா தனது ஏவுகணைச் சோதனைகளை நடத்தத் தயாராகி வருகையில் நான்கு சீன ஆய்வுக் கப்பல்கள் இந்து சமுத்திரத்தில் வியூகமிட்டிருக்கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக வங்காள விரிகுடாவில் இந்தியா மார்ச் 13ஆம் திகதி தான் முன்னெடுக்கவிருந்த - ஏவுகணைச் சோதனைஒட்டிய-விமானபயணங்களுக்கான எச்சரிக்கை முன்னறிவித்தலை பின்னர் ரத்து செய்திருந்தது. இந்த முன்னெச்சரிக்கை பரப்பு 3500 கிலோ மீற்றர் விசாலம் உடையதாக இருந்தது.

கே-4 ரக நீர்மூழ்கிக் கப்பல்களில் இருந்து ஏவப்படும் பலிஸ்டிக் ஏவுகணைச்சோதனைகளை அந்த முன்னெச்சரிக்கை ஏற்பாடு உள்ளடக்கி இருக்கக் கூடும் எனக் கருதப்பட்டது.

அந்த ஏவுகணைச் சோதனையை இந்தியா திடீரென்று தள்ளிப் போட்டமைக்கான அல்லது ஒத்திவைத்தமைக்கான காரணம் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படாத போதிலும், அது சீனாவின் உளவு மற்றும் ஆய்வுக் கப்பல்கள் நெருக்கமாக நின்று கண்காணிக்கும் நிலை இருப்பதாக இந்தியா கருதியமையால்தான் என்ற ஊகமும் உண்டு.

அதைத் தொடர்ந்து இந்தியாவின் புவனேஸ்வர் மற்றும் அப்துல் கலாம் தீவின் கடற்கரைக்கு அருகிலும் 380 கிலோ மீற்றர் மற்றும் 1,650 கிலோ மீற்றர் தொலைவிலும், மார்ச் 26 முதல் 28 வரையிலும் மற்றும் ஏப்ரல் 3 முதல் 4 வரையிலும் விமான பயணங்களுக்கான முன்னெச்சரிக்கை தடை அறிவிப்புகளை இந்தியா விடுத்திருந்தது.

இந்தத் தினங்களில் இந்திய நீர்மூழ்கிக் கப்பல்களில் இருந்து பலிஸ்டிக் ஏவுகணைகள் ஏவி சோதித்துப் பார்க்கப் படலாம் என்ற அபிப்பிராயம் நிலவுகின்றமையால் அதைக் கண்காணிப்பதற்காகத் தனது ஆய்வு கப்பல்கள் நான்கையும் சீனா இந்தியாவைச் சூழ்ந்த இந்து சமுத்திரப் பகுதிக்கு நகர்த்தி இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

சீனாவின் இந்த ஆய்வுக் கப்பல்கள் தமது சீன செய்மதிகளுடன் தொடர்பு பட்டுச் செயலாற்றி, இந்திய ஏவுகணைகளின் வீச்சு, வீரியம், பயணம் ஆகியவற்றை துல்லியமாக எடை போட்டு, கண்காணிக்கக் கூடியவை என்று கூறப்படுகின்றது.

இந்தியாவின் ஏவுகணைச் சோதனைத் திட்ட சமயங்களில் சீனக் கப்பல் உள்புகுந்து, மூக்கை நீட்டி, வேவு பார்ப்பது வழமை என்றும், எனினும் இந்தியா சீனாவின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு, அது நோட்டமிட முடியாத சமயத்திலும், இடத்திலும், தூரத்திலும் தன் ஏவுகணைச் சோதனைகளை நடத்தும் என்றும் விடயறிந்த வட்டாரங்கள் எதிர்வு கூறின.

# இஸ்ரேல் படையின் முற்றுகைக்கு பிரான்ஸ் கண்டனம் வெளியிட்டது



எகிப்து எல்லையை அண்மித்த ரபா பகுதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள இஸ்ரேல் படையினர் முற்றுகைக்கு பிரான்ஸ் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

ரபா பகுதியில் உள்ள பொதுமக்களை இஸ்ரேல் கட்டாயமாக வெளியேற்றுவதாக பரபரப்பு குற்றச்சாட்டு ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே பிரான்ஸ் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது. தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்நாட்டு ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரான் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் தொலைபேசியில் பேசியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அப்போது அவர் ரபாவில் இருந்து பொதுமக்களை கட்டாயமாக வெளியேற்ற முயற்சி செய்வது போர் குற்றமாகும் எனவும், காசாவுக்குள் நுழையும் அனைத்து இடத்தையும் உடனடியாக திறக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் வடக்கு காசாவில் மிகப்பெரிய அல்-ஷிபா மருத்துவமனை அருகில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் நேற்று முன்தினம் குருத்தோலை ஞாயிறையொட்டி காசாவில் அமைதி திரும்ப வேண்டும் என பிரார்த்தனை நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது.

# உக்ரைனின் மேற்குப் பகுதியில் ரஷ்யா மீண்டும் தீவிர தாக்குதல்

57 ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களின் மூலம் உக்ரைனின் மேற்குப் பகுதியில் மீண்டுமொரு தாக்குதலை ரஷ்யா நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலை நேற்று முன்தினம் அதிகாலை எல்விவ் பகுதியில் உள்ள முக்கியமான எரிசக்தி நிலையமொன்றின் மீது மேற்கொண்டுள்ளது.

இதன்போது, ஒரு ஏவுகணை போலந்து வான்வெளி ஊடாக உக்ரைனை நோக்கி ஏவப்பட்டுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கும் தொடர்ந்து வரும் இந்தப் போரில், உக்ரைன் மீது மிகப்பெரிய வான்வழி குண்டுவீச்சுகள் நடத்தப்பட்ட பின்னரே இந்த ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இத் தாக்குதலின் போது, அங்குள்ள உபகரணங்கள் தீப்பிடித்து எரிந்தன என்று உக்ரைன் எரிசக்தி அமைச்சகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், ரஸ்யாவின் 29 ஏவுகணைகளில் 18 இனையும், 28 ட்ரோன்களில் 25 இனையும் எதிர்த்துள்ளதாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது.

இதன்போது, கீழே விழுந்த கே.எச். - 55 க்ரூஸ் ஏவுகணையின் பாகங்கள், கிய்வ் பூங்காவில் கண்டுபிடிக்கப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதேவேளை, எல்விவ் பகுதியை நோக்கி ஏவப்பட்ட ரஷ்ய கப்பல் ஏவுகணை ஒன்று, போலந்தின் வான்வெளியை மீறியதாக போலந்தின் ஆயுதப் படைகள் தெரிவித்துள்ளன.

மேலும், ஒசெர்டோவ் நகருக்கு அருகில் உள்ள போலந்து விண்வெளியில் இந்த ஏவுகணை நுழைந்து 39 வினாடிகள் அங்கேயே இருந்துள்ளது.

இதனை இராணுவ ரேடார் அமைப்புகளால் கண்காணித்திருந்த நிலையில், போலந்தின் இராணுவ பேச்சாளர் ஜேசெக் கோரிஸ்செவ்ஸ்கி செய்தியாளர்களிடம் கூறுகையில், இந்த ஏவுகணை உக்ரைனுக்குச் செல்வதற்கு முன்பு போலந்து வான்வெளியில் சுமார் 2 கிலோ மீற்றர் (1.2 மைல்) தூரம் சென்றதாக குறிப்பிட்டுள்ளார்.

எனினும், ரஷ்யாவிடமிருந்து இது தொடர்பில் உடனடி கருத்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இந்த நிலையில் போலந்து பாதுகாப்பு அமைச்சர், தமது நாடு இராணுவ ரீதியாகவும் மனிதாபிமான பக்கத்திலும் உக்ரைனுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று கூறியுள்ளார்.







# பா.ஜ.கவுக்கு வாக்களிப்பது அவமானம் நெல்லையில் முதல்வர் ஸ்டாலின் உரை

“மக்கள் இடையே வெறுப்பை விதைத்து பிளவை உண்டாக்கி, அதில் குளிர்காய நினைக்கும் பா.ஜ.கவின் எண்ணங்கள் ஒருபோதும் பலிக்காது. மேம்பட்ட சிந்தனைகளைக் கொண்ட நாம் நமது சகோதர, சகோதரிகளுக்கு வழிகாட்ட வேண்டும். பா.ஜ.கவுக்கு வாக்களிப்பது அவமானம் என்று எடுத்துக் கூற வேண்டும்.”

– இவ்வாறு திருநெல்வேலியில் நடந்த தி.மு.க. பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த மார்ச் 22 ஆம் திகதி முதல் பிரச்சாரம் செய்து வருகிறார். நேற்று திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் பங்கேற்று திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் விளவங்கோடு இடைத்தேர்தலில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

பின்னர் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் உரையாற்றுகையில்,

“தமிழகத்தை மதிக்கும், தமிழர்களை வெறுக்காத ஒருவர் பிரதமர் ஆக வேண்டும் என்றால் அது உங்கள் கையில்தான் உள்ளது. அதற்கு பிரதமர் மோடியை தோற்கடித்தாக வேண்டும். மீண்டும் மோடி ஆட்சிக்கு வந்தால் அமைதியான இந்தியா அமளியான இந்தியாவாக மாறிவிடும். அதற்கு சமீபத்திய உதாரணம் மணிப்பூர் மாநிலத்தில் நடந்த கலவரம். அந்த மாநில மக்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளைப் போல வாழ்ந்தனர். அதையெல்லாம் மறக்க முடியுமா?

அதனால்தான் சொல்கிறேன்... பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், ஒருதாய் மக்களாக ஒற்றுமையாக வாழக்கூடிய இந்தியாவை வெறுப்பு விதைகளைத் தூவி நாசம் செய்து விடுவார்கள். எனவே, நீங்கள் அமைதியான வளர்ச்சி நோக்கிய இந்தியாவுக்காக வாக்களிக்க வேண்டும் என்று கேட்கத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்.

சில நாள்களுக்கு முன்பாக குமரிக்கும், நெல்லைக்கும் பிரதமர் மோடி வந்திருந்தார். தேர்தல் வந்துவிட்டதால், இப்போது



தமிழகத்துக்கு அடிக்கடி வந்து போய்கொண்டிருக்கிறார். வெள்ளம் வந்தபோது எங்கே இருந்தீர்கள்? இரண்டு இயற்கைப் பேரிடர் அடுத்தடுத்து தமிழகத்தின் வடமாவட்டத்தையும், தென் மாவட்டத்தையும் தாக்கியது. பிரதமர் மோடி அவர்களே அதற்காக ஒரு பைசாவது கொடுத்தீர்களா? நிதிதான் தரவில்லை. வாக்கு கேட்டு தமிழகம் வந்தபோது மக்களுக்கு ஆறுதலான வார்த்தைகளையாவது கூறினீர்களா?

மத்திய அரசிடமிருந்து நிதி வரவில்லை என்றாலும், மக்களுக்குக் கொடுக்க வேண்டியதை உதவ வேண்டும் என்பதற்காக மாநில அரசு செயல்பட்டது. அமைச்சர்கள் பலர் இந்தப்பகுதியில் தங்கியிருந்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டனர். தொற்று நோய்ப பரவாமல் இருக்க 2500இக்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடத்த உத்தரவிட்டேன்.

பா.ஜ.கவுக்கு வாக்களிப்பது அவமானம் என்று எடுத்துக் கூற வேண்டும். பா.ஜ.கவுக்கு வாக்களிப்பது எதிர்கால சந்ததியினருக்கு செய்கின்ற துரோகம் என்று புரியவைக்க வேண்டும். தேர்தலுக்காக மட்டும் பிரதமர் தமிழகம் வருகிறார். தமிழகத்துக்காக அவர் கொண்டு வந்த சிறப்பு திட்டங்கள் என்ன? பிரதமர் பதில் சொல்ல வேண்டும். தமிழகத்துக்கு ஒரு சிறப்பு திட்டத்தைக்கூட நிறைவேற்றாமல், 10 ஆண்டு காலம் என்ன ஆட்சி செய்தீர்கள்? ஆனால், நாங்கள் செலுத்தும் வரிப்பணத்தில் ஒரு ரூபாய் கொடுத்தால், எங்களுக்கு 29 சதம்தான் திரும்பி வருகிறது.” – என்றார்.

# தமிழகத்தில் முதல்முறையாக மகளிர் ஜல்லிக்கட்டு போட்டி





பொங்கல் பண்டிகை நாள்களில்மதுரை மாவட்டம் அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூரில் நடக்கும் ஜல்லிக்கட்டுப் போட்டிகளைக் காண உள்ளூர் பார்வையாளர்கள் முதல் வெளிநாட்டினர் வரை ஆர்வமாக வருகின்றனர்.

இதுவரை காளைகளை வளர்ப்பது, பயிற்சி அளிப்பது, ஜல்லிக்கட்டு நடைபெறும் இடத்துக்கு காளைகளை அழைத்து வந்து வாடிவாசலில் அவிழ்த்துவிடுவது, களத்தில் இறங்கி காளைகளை அடக்க முயற்சிப்பது என அனைத்தையும் ஆண்களே செய்து வந்தனர்.

ஜல்லிக்கட்டுக் காளைகளைவளர்ப்பதில் மட்டுமே பங்களித்துவந்த பெண்கள், அண்மைக்காலமாக வாடிவாசலில் காளைகளை அவிழ்த்துவிடும் நிகழ்விலும் பங்கேற்கத் தொடங்கியுள்ளனர்.

இந்தை நிலையில், பெண்கள் மட்டுமே பங்கேற்கும் ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்த சுற்றுலா நிறுவனங்கள், அமைப்புகள் முயற்சிஎடுத்து வருகின்றன.

இதுகுறித்து சுற்றுலா நிறுவன உரிமையாளரும், ஜல்லிக்கட்டு ஆர்வலருமான வி.கே.டி.பாலன் கூறுகையில்,

“அடுத்த ஆண்டு பொங்கல் பண்டிகையின்போது அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் முடிவடைந்த பின்பு, அலங்காநல்லூர் அருகேயுள்ள ஜல்லிக்கட்டு அரங்கில் மகளிர் ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். அதற்கான அனுமதியை தமிழக அரசு மற்றும் மதுரை மாவட்ட ஆட்சியரிடம் பெறும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். தொடக்கத்தில் மகளிர் பங்கேற்கும் ஜல்லிக்கட்டுப் போட்டி சாத்தியமில்லை என்று எதிர்த்தவர்களே, தற்போது ஆதரவு தரத் தொடங்கியுள்ளனர்.

மகளிர் ஜல்லிக்கட்டுப் போட்டியில் பங்கேற்க பெண் பொலிஸார், கபடி வீராங்கனைகள், கல்லூரி மாணவிகள் ஆர்வமாக முன் வந்துள்ளனர். அவர்களுக்கு 3 மாத காலம் பயிற்சி அளிக்க உள்ளோம்.” – என்றார்.

# இளநீர் ஏற்றுமதியின் மூலம் 344 கோடி ரூபா வருமானம்



இலங்கையில் கடந்த பெப்ரவரி மாதத்தில் இளநீர் ஏற்றுமதியின் மூலம் 3, 439 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, இந்த வருமானமானது கடந்த வருடத்தின் பெப்ரவரி மாதத்தை விடவும் 734 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளதாக தெங்கு ஏற்றுமதி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதேநேரம் கடந்த வருடத்தின் பெப்ரவரி மாதத்தில் இளநீர் ஏற்றுமதியின் மூலம் 2, 705 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கெஹெலியவின் பிணைக் கோரிக்கை மேல்நீதிமன்றம் 3ஆம் திகதி தீர்ப்பு



முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் பிணை கோரிய சீராய்வு விண்ணப்பம் மீதான தீர்ப்பிற்கு திகதியிடப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றில், நீதிபதி சுஜீவ நிசங்க முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதற்கமைய, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி மேற்படி மனு தொடர்பான தீர்ப்பை வழங்க கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நேற்று மனு மீதான விசாரணையின் போது, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவை பிணையில் விடுவிக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு விண்ணப்பத்தை நிராகரிக்குமாறு சட்டமா அதிபர், தமது அடிப்படை ஆட்சேபனைகளை முன்வைத்திருந்தார்.

# புனித வெள்ளி, உயிர்த்த ஞாயிறு நாள்களில் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு உத்தரவு



புனித வெள்ளிக்கிழமையான 29 ஆம் திகதியும், உயிர்த்த ஞாயிறு தினமான 31 ஆம் திகதியும் நாட்டிலுள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் வரும் யாத்திரீகர்கள் மற்றும் அவர்களது பயணப்பொதிகளை சோதனையிடும் விசேட வேலைத்திட்டம் தொடர்பில் கலந்துரையாடி நடைமுறைப்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அனைத்துப் பொலிஸ் பிரிவுகளுக்கும் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதன்படி, சமூக பொலிஸ் குழுக்கள், அந்தந்த தேவாலயங்களின் பாதிரிமார்கள் மற்றும் அமைப்பாளர்களுடன் இணைந்து வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பொலிஸ் மா அதிபர், சகல பிரிவுகளுக்கும் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.



# பிள்ளைகளுக்கு அறிவை வழங்குவது போன்றே அவர்களின் போசாக்கையும் பாதுகாக்க வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"நாட்டின் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை வழங்குவதற்காக அவர்களுக்கு பாடம் தொடர்பான அறிவை வழங்கி பரீட்சைகளுக்கு தயார்படுத்துவதைப் போன்றே அவர்களின் போசாக்கும் பாதுகாக்கப்பட வேண்டும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டி சுஜாதா மகளிர் கல்லூரியில் நேற்று முற்பகல் இடம் பெற்ற '2024 பாடசாலை உணவுத் திட்டம்' ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள தரம் 1-5 வரை உள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலையில் போசாக்கு உணவு வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

போசாக்கு நிபுணர்களின் பரிந்துரைகளை கருத்திற்கொண்டு மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்னர் காலை 7.30 மணிக்கும் 8.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இந்தக் காலை உணவை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிபர் திருமதி பிரியங்கிகா விஜேசிங்க நினைவுப் பரிசையும் வழங்கினார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

"பாடசாலை உணவுத் திட்டம் ஆரம்பிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் எதிர்பார்ப்புகளில் ஒன்றை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பாக இந்தச் சந்தர்ப்பத்தை நான் பார்க்கிறேன். கல்விச் செயற்பாடு பூரணமடைவதற்கு, மாணவர்களுக்கு பாட அறிவை வழங்கி,



பரீட்சைக்குத் தயார் படுத்துவதைப் போன்றே அவர்களின் போசாக்கையும் பாதுகாக்க வேண்டும். உலகில் பல நாடுகள் இந்தப் பாடசாலை உணவு திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன.

நமது நாட்டில் போசாக்குக் குறைபாடு பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. 'அஸ்வெசும' திட்டத்தின் மூலம் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு வழங்கப்படும் நிதி நிவாரணத்தை மூன்று மடங்காக உயர்த்தியுள்ளோம்.

பாடசாலை மாணவர்களிடையே போசாக்குக் குறைபாடு அதிகரிப்பதற்கு வருமான அளவு மட்டும் காரணம் அல்ல. சில மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்காக காலை 6.00 மணியளவில் வீட்டை விட்டு வெளியில் வருகிறார்கள். இதனால் அவர்களுக்கு காலை உணவு சாப்பிட முடிவதில்லை.

மேலும் பகலுணவையும் சாப்பிட முடிவதில்லை. எனவே எந்த அந்தஸ்த்தை கொண்டிருந்தாலும், எந்த இனத்தை அல்லது மதத்தை சேர்ந்தவராக இருந்தாலும் சகல மாணவர்களும் இந்த சிக்கலை எதிர்கொள்கின்றனர். எனவே, மாணவர்களுக்கு பாடசாலையில் உணவு கிடைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவது மிகவும் அவசியம்.

தற்போது நாட்டில் நவீன கல்வி முறையை உருவாக்குவதற்கு நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். 2024 ஆம் ஆண்டுக்கு மாத்திரமன்றி 2030 ஆம் ஆண்டுக்கும் உகந்த கல்வி முறையை உருவாக்க வேண்டும். அந்தப் பணிகளை இப்போது செய்து வருகிறோம். ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல், நவீன தொழில்நுட்ப அறிவை வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

அடுத்த சில ஆண்டுகளில், செயற்கை நுண்ணறிவுத் திட்டத்தை ஆரம்பப் பாடசாலைகள் மட்டுமின்றி, உயர்கல்வி கற்பிக்கப்படும் அனைத்துப் பாடசாலைகளிலும் அறிமுகப்படுத்த உள்ளோம்.

நவீன தொழில்நுட்பத்துடன் நாம் முன்னேற வேண்டும். அந்த தொழில்நுட்ப அறிவை பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும். அதன்படி, பாடசாலைக் கல்வி மற்றும் பரீட்சை முறையை மாற்றியமைப்பது குறித்து கவனம் செலுத்தியுள்ளோம். இந்த நவீன தொழில்நுட்ப அறிவோடு பிள்ளைகளின் ஆங்கில மொழி அறிவையும் வளர்க்க வேண்டும். அதற்கான திட்டங்களையும் வகுத்துள்ளோம்."

– என்றார்.

# பிள்ளைகளுக்கு அறிவை வழங்குவது போன்றே அவர்களின் போசாக்கையும் பாதுகாக்க வேண்டும்























# சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் திருத்தங்கள் மூலம் எந்த தேர்தலும் ஒத்திவைக்கப்படவே மாட்டாது

## நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவிப்பு

“நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேர்தல் திருத்தச் சட்டமூலங்களின் ஊடாக எந்தவொரு தேர்தலையும் பிற்போட எதிர்பார்க்கவில்லை.”

– இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்கள் குறித்து மக்கள் அறிந்திருப்பது மிகவும் முக்கியமான ஜனநாயக அம்சமாகும். இந்த நாட்டில் தற்போதுள்ள சட்டத்தின்படி, கற்பழிப்பு என்பது பெண்ணின் மீதான அத்துமீறல் மட்டுமே. ஆனால் புதிய திருத்தங்கள் மூலம், பாலினத்தைப் பொருட்படுத்தாமல் சட்டத்தை நிறைவேற்ற முடியும். இங்கு, சட்டப்பூர்வமாகப் பிரிந்த மனைவிக்கு கணவன் செய்யும் பாலியல் வன்முறை கற்பழிப்பாகக் கருதப்படுகிறது. பொலிஸ் காவலில், சிறை அல்லது வேறு ஒருவரின் காவலில் இருக்கும் போது மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்களுக்காக வழங்கப்படும் தண்டனையை அதிகரிக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.

மேலும், இளவயதினர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டால் பத்து ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த சட்டத் திருத்தங்கள் அனைத்தும் சிரேஷ்ட சட்டத்தரணிகள் குழு சுமார் நான்கு ஆண்டுகளாக நடத்திய ஆய்வின் பின்னரே முன்வைக்கப்பட்டுள்ளன. இதற்கு பல்வேறு சமூக ஆர்வலர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இந்த சட்டமூலத்தை எதிர்த்து சில தரப்பினர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இது தவிர தேர்தல் திருத்த சட்டமூலமும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 1994 இல் திருமதி சந்திரிகா ஜனாதிபதி வேட்பாளராக மூன்று தேர்தல் வாக்குறுதிகளை வழங்கினார். அது நிறைவேற்றதிகாரம் உடைய ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது, ஊழலைக் கட்டுப்படுத்துவது மற்றும் விகிதாசார வாக்களிப்பு முறையை நீக்குவது. ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கு பொறுப்பான உறுப்பினர்களை தெரிவு செய்யவும் அங்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அரசமைப்பு பல தடவைகள் திருத்தப்பட்ட போதிலும், தேர்தல் முறைமையை மாற்றுவதற்கு எவ்வித திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

19 ஆவது அரசமைப்புத் திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தது. அதுவரை, ஜனாதிபதி ஒரு கொலை செய்திருந்தாலும், அவர் மீது வழக்குத் தொடர முடியாமல் இருந்தது. ஆனால் 19 ஆவது திருத்தம் அந்த நிலையை மாற்றியது. அதன்படி இதுவரை நான்கு ஜனாதிபதிகளுக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேலும், ஊழலைத் தடுக்க சட்ட அதிகாரம் கொண்ட ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி முதல் கீழ்நிலை அதிகாரி வரை சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை கண்காணிக்கும் அதிகாரம் இந்த ஆணைக்குழுவுக்கு உள்ளது. அந்த ஆணைக்குழு தொடர்பான பல திருத்தங்கள் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஊழல் கண்காணிப்பு ஆணைக்குழுவை ஒரு சுதந்திரமான நிறுவனமாக மாற்றுவதற்கு தேவையான சட்டத்தை இயற்றுவதே இதன் நோக்கமாகும்.

1994 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதித் தேர்தலின் போது ஒவ்வொரு தலைவர்களும் இது தொடர்பாக வாக்குறுதிகளை அளித்துள்ளனர். ஆனால் அந்த வாக்குறுதிகளை அந்த தலைவர்கள் யாரும் நிறைவேற்றவில்லை. ஆனால் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் இந்த ஆண்டு விகிதாசார தேர்தல் முறை மற்றும் ஊழலைக் கட்டுப்படுத்தும் வகையில் திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளின் தேர்தல் முறைகளில், தாழ்த்தப்பட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தொகுதி முறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதிக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் செனட் சபை முறைமை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் நான் கருதுகிறேன்.

நாடாளுமன்றத் தேர்தலில் திறமையானவர்களை விடவும் பிரபலமானவர்கள்தான் அதிகமாக நாடாளுமன்றத்துக்கு வருவார்கள். ஆனால் செனட் சபை முறையின் ஊடாக பிரபலமில்லாத திறமையானவர்களை நாடாளுமன்றத்துக்கு நியமிக்கலாம்.

இதுவரையில் முன்வைக்கப்பட்ட தேர்தல் திருத்தங்கள் மூலம் தேர்தலை ஒத்திவைக்கும் திட்டம் இருப்பதாக சமூகத்தில் சில பேச்சுக்கள் எழுந்துள்ளன. ஆனால் இந்தத் திருத்தங்கள் மூலம் தேர்தலை ஒத்திவைக்க எதிர்பார்க்கப்படவில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் இரண்டு தேர்தல்கள் நடைபெறவுள்ளன. அதன் போது எந்தவொரு வேட்பாளரும் இந்த தேர்தல் திருத்தம் குறித்து தங்கள் கருத்தை தெரிவிக்கலாம். பொதுமக்களுக்கும் இது தொடர்பாக தமது முடிவை எடுக்க முடியும்.” – என்றார்.



# மாணவர்களின் வயிற்றை நிரப்புவதன் மூலமாக சிறந்த கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தலாம்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த் தெரிவிப்பு

"கல்வி கற்பிப்பதற்கு முன்னர் அனைத்து மாணவர்களின் வயிற்றையும் நிரப்புவதன் மூலம், சிறப்பாக கல்வி நடவடிக்கைகளில. அவர்கள் ஈடுபடுவதற்கான வாய்ப்பைப் பெறுகிறார்கள்."

– இவ்வாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த் தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டி சுஜாதா மகளிர் கல்லூரியில் நேற்று முற்பகல் இடம் பெற்ற '2024 பாடசாலை உணவுத் திட்டம்' ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு இந்த உணவுத் திட்டம் முன்பு செயல்படுத் தப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு முதல் முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு போசாக்குள்ள உணவு வழங்கும் திட்டம் தொடங்கப்படும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சராக 16,600 மில்லியன் ரூபாவை இதற்காக ஒதுக்கியுள்ளார். மேலும், ஐக்கிய நாடுகளின் உணவுத் திட்டம் மூலமாகவும் உதவி பெறப் படுகிறது. அதன்படி, 17 லட்சம் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கும் காலையில் போசாக்குள்ள உணவு வழங்குவது சாத்தியமாகியுள்ளது.

பரிந்துரைக்கப்பட்ட தரத்தில் போசாக்குள்ள உணவு வழங்க சம்பந்தப் பட்ட துறைகளுக்கு ஏற்கனவே அறிவு றுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கல்விகற்பிப்பதற்கு முன்னர் அனைத்து மாணவர்களின் வயிற்றை யும் நிரப்புவதன் மூலம், சிறப்பாக கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடு வதற்கான வாய்ப்பைப் பெறுகிறார்கள், இது மாணவர்களின் மன நிலையை சீர்செய்யவும் உதவுகிறது.

கடந்த மாதம் பாடசாலை மாணவர்க ளுக்கு பாடப்புத்தகங்கள் வழங்கப் பட்டன. மேலும் சீருடைகள் சரியான நேரத்தில் வழங்கப்பட்டன. இன்று முதல் போசாக்குள்ள உணவு வழங் கப்படும். ஆனால் இதற்கு ஊடகங்கள் மூலம் கிடைத்த பிரசாரம் மிகவும் குறைவு. பத்திரிகைகளில் போசாக்கு குறைபாடு பற்றிய செய்திகளை பெரிய எழுத்தில் வெளியிடும் ஊடக நிறுவ னங்களும் இந்த போசாக்குள்ள உணவு வழங்கல் திட்டம் தொடர்பில் மக்களுக்கு தெரிவிக்கும் என நம்புகிறேன்." – என்றார்.

# கஞ்சா விற்பனையில் ஈடுபட்டவர் பொலிஸ் நாய் உதவியுடன் கைது

## திருகோணமலை ரொட்டவெவ பகுதியில்

**(அப்துல்சலாம் யாசீம்)**

திருகோணமலை ரொட்டவெவ பகுதியில் கஞ்சாப் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த சந்தேக நபரொருவரை நேற்றுய் மாலை தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட பொலிஸ் அதிரடிப்படையின ரும்,மொரவெவ பொலிஸாரும், கந்த ளாய்ப் பிரதேசத்தில் இருந்து அழைத்து வரப்பட்ட மோப்ப நாய்களின் உதவி யுடன் இந்த சந்தேக நபரைக் கஞ்சா வுடன் கைது செய்தனர் எனவும் பொலி ஸார் தெரிவித்தனர்.

பல நாள்களாகக் கஞ்சாப் போதை பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த 45 வயதான நைசர் என்றழைக்கப்படும் முஹம்மது ஹாசீம் என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை போக்குவரத்து பொலி ஸார் மேற்கொண்ட சோதனையின் போது கேரளா கஞ்சாவை தம்வசம் வைத்திருந்த 27 வயதுடைய நபர் ஒரு வரையும் தாங்கள் கைது செய்துள்ளனர் எனவும் மொரவெவ பொலிஸார் தெரி வித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் களை திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள் ளமையுடன் புலன் விசாரணைகளையும் தாங்கள் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.





# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகளை கண்டுபிடிப்பதில் ஜனாதிபதிக்கு அக்கறையில்லை

## போட்டுத் தாக்குகின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

இன்று மீண்டும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து பலரும் பேசுகின்றனர். இந்த விடயத்தில், ஆங்காங்கே வெவ்வேறு கதைகளைச் சொல்வதை விடுத்து, வெளிப்படைத்தன்மையுடன் கூடிய வெளிப்படையான மற்றும் துல்லியமான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கு பொதுவான ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு பதிலாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்களை ஈடுபடுத்துவது உகந்தது. வெளிப்படையான மற்றும் நேர்மையான விசாரணையை முன்னெடுப்பது காலத்தின் கட்டாயம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ் தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 133 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் ஹம்பாந்தோட்டை, அம்பலாந்தோட்டை, கிவுல கனிஷ்ட வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றய் இடம்பெற்றது. இந்நிகழ்வில், கல்லூரியின் நடனம் மற்றும் அரங்கேற்றங்கள் குழுவினருக்குத் தேவையான ஆடைகளை பெறுவதற்குத் தேவையான ஒரு இலட்சம் ரூபா நிதியையும் அவர் நன்கொடையாக வழங்கி வைத்தார்.

அங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி கூட ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸாரை அழைத்து விசாரணைகளை நடத்துவார் எனக் கூறினாலும், இதுவரையில் அதை அவர் நாடவே இல்லை. இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளைத் தேடுவதில் அவருக்கு விருப்பமில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான தொடர்பான விசாரணைகளை மறைத்து வருவதிலும், அவ்விவகாரத்தில் ஈடுபாடு காட்டாமையும் பலத்த சிக்கலையும் கேள்விகளையும் எழுப்பி நிற்கின்றன். பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஏற்பட்டுள்ள பெரும் துயரம் காரணமாக நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

எந்தவொரு நபரையும் பாதுகாக்க வேண்டிய தேவை ஐக்கிய மக்கள் சக்திக்கு இல்லாததால் நேர்மையான மற்றும் வெளிப்படையான விசாரணையை நாம் மேற்கொள்வோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் சேதமாக்கப்பட்ட தேவாலயங்களை புனரமைப்பதில் முக்கிய பங்காற்றியவன் என்ற வகையில், இந்த வெறுக்கத்தக்க பயங்கரவாதத் தாக்குதலில் தொடர்புடையவர்களைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்கு அதிகபட்ச தண்டனையை பெற்றுக் கொடுப்பேன் என எதிர்க்கட்சித் தலைவர் உறுதி தெரிவித்தார்.

அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளுக்கு சுற்றுப்பயணங்களை ஏன் மேற்கொள்ளவில்லை எனப் பலரும் கேட்கின்றனர். அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் செல்வதை விட நாட்டில் உள்ள 10,126 பாடசாலைகளுக்குச் சென்று அவர்களின் குறைபாடுகளை ஆராய்ந்து இந்நாட்டில் அரச கல்வியைப் பெறும் 41 இலட்சம் மாணவர்களுக்கு இயன்ற பக்க பலத்தை வழங்கி, இந்தக் குறைபாடுகளை தீர்த்து ஸ்மார்ட் பாடசாலைகளாக மாற்றுவதே தனக்கு முக்கியான விடயமாக அமைவதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.



# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகளை கண்டுபிடிப்பதில் ஜனாதிபதிக்கு அக்கறையில்லை









# இன்றைய ராசி பலன்கள் - 25.03.2024




இன்று மிகவும் சிறப்பான நாள். உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் காரணமாக வெற்றியும் திருப்தியும் அடையலாம்.

இன்று நீங்கள் தன்னிச்சையாகப் பணி புரிந்து பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நேர்மையாக வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். இதனால் மகிழ்ச்சியும் திருப்தியும் நிறைந்திருக்கும்.

இன்று நீங்கள் ஆற்றலுடனும் முழு ஆரோக்கி யத்துடனும் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் இயந்திர கதியில் இயங்கும். இது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். இன்றைய சவால்களை சந்திக்க நீங்கள் திட்டமிட்டு செயல் பட வேண்டும்.

பணியில் வளர்ச்சி சிறப்பாக காணப்படாது.பணிகள் அதிகமாக காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்க்க இயலாது. குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி குறைந்து காணப்படும்.

பொறுப்புகள் அதிகம் இருப்பதால் தேவையற்ற செலவுகள் காணப்படும். எனவே பணத்தை சாதுரியமாக செலவு செய்ய வேண்டும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. இன்று சிறிய விஷயங்க ளுக்குக் கூட எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். இன்று மனதில் சமநிலையோடு இருங்கள். இனிய இசை கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

இன்று பணிகள் கடினமாக காணப்படும். நிலுவையில் உள்ள பணிகளை திறமையாகக் கையாண்டு குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் வேறுபாட்டை வெளிப் படுத்துவீர்கள். உரையாடலின் போது கவனம் தேவை.

குடும்ப பொறுப்புகள் அதிகரிக்கும் காரணத்தால் பணம் செலவாகும்.அதிகரிக்கும் செலவுகளை சுமையாக உணர்வீர்கள்.




இன்று உங்களுக்கு அனுகூலமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று அதிர்ஷ்டம் சிறந்த பலனைத் தரும்.

பணியில் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக் கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். நீங்களும் உங்கள் துணையும் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். இதன் மூலம் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு

நிதிநிலையில் ஸ்திரத்தன்மை காணப்படும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

உங்களின் தேக ஆரோக்கியம் மற்றும் ஆற்றல் காரணமாக இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும்.




இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். நிறைய வாய்ப்புகள் காணப்படும். இன்றைய நாளை சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளுங்கள். இன்று திருப்தி நிறைந்து காணப்படும்.

நீங்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றுவீர்கள். கடினமான பணிகளைக் கூட எளிதாகச் செய்து உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியாக உணர்வீர்கள். இருவரும் தரமான நேரத்தை இணைந்து செலவழிப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சீராக இருக்கும். குடும்ப நலத்திற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று திடமாகவும் வலிமையாகவும் காணப்படுவீர்கள்.




உங்கள் மனதில் அவநம்பிக்கை உணர்வு காணப்படும். இந்தப் போக்கை நீங்கள் சமாளிக்க வேண்டும். கடினமான சூழ்நிலை காரணமாக இன்று சுமையான நாளாக உணர்வீர்கள்.

இன்று பணியிடத்தில் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய கவனமாகப் பணியாற்ற வேண்டும். சிறப்பாக திட்டமிடுவதன் வெற்றி சாத்தியப்படும்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் ஆரோக்கியமான உறவு முறை காணப்படும்.இன்று பணவரவு சிறப்பாக இருக்கும். இன்று அதிர்ஷ் டம் காரணமாக பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று கண் எரிச்சல், முதுகுவலி, மற்றும் கால் வலி போன்ற பாதிப்புகள் ஏற்படலாம். பிரார்த்தனை மற்றும் இறை மந்திரங்கள் சிறந்த பலனைத் தரும்.




இன்று கடினமான சூழ்நிலை கானப் படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளவேண்டும். உங்கள் முயற்சி மற்றும் சிறப்பாக திட்டமிடுவதன் மூலம் உங்கள் இலக்குகளை அடைய லாம்.பணியிடத்தில் பதற்றமான சூழ்நிலை காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க திட்டமிட்டு பணியாற்ற வேண்டும். சிறந்த பலனைக் காண நீங்கள் அதிக முயற்சி எடுக்க வேண்டும்.

தவறான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் பிரச்சினை ஏற்படலாம். இருவரும் ஒருவர் கருத்தை மற்றவர் புரிந்துகொள்ள தவறுவீர்கள்.

இன்று பண இழப்பு ஏற்படலாம். எனவே பணத்தை கவனமாக கையாள வேண்டும்.உங்கள் உடன் பிறந்தவர்களின் ஆரோக்கியத்துக்காக பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று வருத்தத்துடன் காணப்ப டுவீர்கள். உணர்ச்சி வசப்படக் கூடிய நிலை இருப்பதால் அமைதியாக இருப் பது நல்லது. சமாளித்து அமைதியாக இருக்க வேண்டும். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

சவாலான பணிகள் காணப்படுவதால் ஓய்வெடுக்க நேரம் காணாது. எனவே திட்டமிட்டு உங்கள் பணிகளை ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் பேசும் போது உணர்ச்சி வசப்படுவீர்கள். உறவில் நல்லிணக்கம் உருவாக இத் தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று குடும்பத் தேவைக்காக பணம் செலவு செய்வீர்கள். பொறுப்புகள் அதிகம் காணப்படுவதால் செலவுகள் அதிகமாக இருக்கும்.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. செரிமானம் சம்பந்தமான பிரச்சினை ஏற்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.03.2024

## தனுசு

இன்று உங்கள் இலக்குகளை அடைவதில் வெற்றி பெறுவீர்கள். முக்கிய முடிவுகள் நல்ல பலன் தரும். நீங்கள் இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல்திறனில் திறமையை வெளிபடுத்துவீர்கள். உங்கள் திறமை மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். சிறிய அளவிலான கடன் வாங்குவீர்கள்.

உங்களிடம் இன்று ஆற்றல் நிறைந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிப்பீர்கள்.

## கும்பம்

இன்று நீங்கள் அதிகம் எதிர்பார்க்க இயலாது. என்றாலும் நம்பிக்கையுடன் செயல்படுங்கள். நேர்மறை கண்ணோட்டம் இன்று மிகவும் அவசியம்.

நீங்கள் வெற்றி பெறுவதற்கு கடுமையாக உழைக்க வேண்டும். உங்கள் பணிகளில் தாமதங்களை சந்திப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையிடம் பேசும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். உறவில் நல்லிணக்கம் உருவாக இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.இன்று நிதிநிலை சிறப்பாக காணப்படாது. இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தை சேமிக்க இயலாது.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

## மகரம்

இன்றைய கடினமான சூழ்நிலையை சமாளிக்க உங்களுக்கு பொறுமை தேவை. எந்தவித இழப்பும் ஏற்படாத வகையில் திட்டமிட வேண்டும். இன்று உறுதியான அணுகுமுறை தேவை.

பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் செயல்களில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு மிகுந்த கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பயணத்தின்போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று கால் வலியால் அவதிப்பட நேரலாம். தியானம் மற்றும் யோகா மேற்கொள்வது சிறந்தது.

## மீனம்

இன்று உங்களுக்கு அனுகூலமான நாளாக இருக்கக் காண்பீர்கள். உங்கள் இலக்குகளை நம்பிக்கையுடன் அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் நண்பர்கள் மற்றும் நெருங்கியவர்களிடம் நல்ல உறவு முறையைப் பராமரிப்பீர்கள். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று இனிமையான நாளாக உணர்வீர்கள். உங்கள் துணையுடன் நட்பாக நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் காரணமாக உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று உங்களிடம் நம்பிக்கை உணர்வு நிறைந்து காணப்படும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDO OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thamilan Group Chairman
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
HEAD OFFICE No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04. Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546
JAFFNA OFFICE No. 21/1, Keratikivu Road, Navatkuli, Jaffna. Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park